

மே 12

## புனித நெரேயுஸ், அக்கிலேயுஸ், பங்கிராஸ்

நெரேயுஸ், அக்கிலேயுஸ், இவர்கள் இருவரும் சகோதரர்கள் இவர்கள் பிளாவியா டொமிற்றில்லா என்னும் சீமாட்டியிடம் வேலை பார்த்தார்கள். இவர்கள் இருவரையும் மனந்திருப்பியவர் புனித இராயப்பர். இவர்கள் இருவரும் இராணுவ வீரர்கள். கிறிஸ்தவ மதத்தைப் பற்றி டொமிற்றில்லா சீமாட்டிக்கு அறிவித்தனர். அவள் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து தன் கன்னிமையை கடவுளுக்கு அர்ப்பணித்தாள். அவளை மணம்முடிக்க தீர்மானித்திருந்த அவுரேலியன் என்பவன் கடும் கோபம் கொண்டு இவர்கள் மூவரும் கிறிஸ்தவர்கள் என்று அதிகாரியின் முன் குற்றம் சாட்டினான். 100-ஆம் ஆண்டில் இவர்கள் வேதத்திற்காக கொல்லப்பட்டனர். பங்கிராஸ் என்பவர் பிரீஜியா நாட்டில் பிரபுக் குலத்தில் பிறந்தவர். 14-ஆம் வயதில் இவர் ரோமைக்கு வந்தார். இவரை கைது செய்து அதிகாரியின் முன் கொண்டு சென்றார்கள். பொய்த் தேவதைகளுக்கு இவர் பலியிட மறுத்தமையால் இவரை வேதத்துக்காக கொன்றார்கள்.

**சிந்தனை:**

வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் நம் திருமறையைப் பற்றி பிறருக்கு அறிவிப்போம்.

**செபம்:**

ஆண்டவரே, அவிசுவாசிகளுக்கு இடறலாய் இருக்கும் கிறிஸ்தவர்கள் மீது இரக்கமாயிரும்.